# கடுகு

1. ஸ்கிலிரோடினியா தண்டமுகல் நோய் : ஸ்கிலிரோடினியா ஸ்கலிரோடியோரம்
2. அல்டர்னேரியா கரும்புள்ளி நோய் : அல்டர்னேரியா பிரேசிகா டி. ரபனி
3. வெள்ளை துரு நோய் : அல்புகோ கேன்டியா
4. அடிச்சாம்பல் நோய் : பெரனோஸ்பேரா பேராசிடிகா

ஸ்கிலிரோடினியா தண்டமுகல் நோய் : ஸ்கிலிரோடினியா ஸ்கலிரோடியோரம்

அறிகுறிகள்

தண்டுகளில் கருப்பு நிறம் புள்ளியில் காணப்படும். மேலும் வெள்ளை நிற பூசணத்தால் சூழப்பட்டிருக்கும்.

பாதித்த இலைகள் வெளிர்ந்த தோற்றத்துடனும், திசுக்கள் உதிர்ந்தும், காணப்படும்.

தண்டுகளில் கோடுகள் இருப்பதால் முதிர்வதற்கு முன்னரே செடிகள் பழுத்துவிடும்.

பாதித்த இடத்தில் ஸ்கிலிஆராசியா என்னும் கருப்பு நிற பூசணவித்துக்கள் காணப்படும்.

கட்டுப்பாடு

பயிர் சுழற்சி முறையைப் பின்பற்றவேண்டும்.

சுத்தமான நல்ல விதைகளைப் பயிரிடவேண்டும். அடர்த்தியாக விதைக்கக் கூடாது.

அல்டர்னேரியா கரும்புள்ளி நோய் : அல்டர்னேரியா பிரேசிகா அ. ரபனி

அறிகுறிகள்

1. சாம்பல் நிற இலைப்புள்ளிகள் மத்தியில் மஞ்சள் நிறமுடைய புள்ளிகளைக் கொடுக்கும்.
2. இலைகளில் காய்களிலும், செடி முதிர்யடைவதற்கு ஒரு சில வாரத்திற்கு முன் வட்டவடிவ கரும்புள்ளிகள் தோன்றும்.
3. காய்கள் பாதிப்படைந்து, அதில் வளையப் புள்ளிகளாக காணப்படும். இறுதியில் உதிர்ந்துவிடும்.

கட்டுப்பாடு

பயிர் சுழற்சி முறையைப் பின்பற்றவேண்டும்.

காய்கள் வயல்களில் உதிர்வதற்கு முன்னரே அறுவடை செய்ய வேண்டும். மேங்கோசெப் 0.2 சதவிகிதம் என்ற அளவில் நோய் தோன்றிய உடன் தெளிக்கவும்.

வெள்ளை துரு நோய் : அல்புகோகேன்டியா

அறிகுறிகள்

1. வெண்மையான மஞ்சள் நிறமுடைய துகள்கள் இலையின் அடிப்பாகத்தில் காணப்படும். இந்தத் துகள்கள் பட்டைப் போன்ற தோற்றத்தை அளிக்கின்றன.
2. மஞ்சள் நிறப் புள்ளிகள் மேல் பக்கத்தில் காணப்படும்.
3. காய்களின் மேல் துகள்கள் காணப்படும். பாதிக்கப்பட்ட பூக்களில் இதழ்கள் மாறியும், வளமற்றும், தடித்துதம், பெரியதாகவும் காணப்படுகிறது.
4. ரேப் விதையில் டர்னிப் அல்லது இரகங்கள் ஆகியவை அதிகமாக இந்நோயினால் பாதிக்கப்படுகின்றன.

கட்டுப்பாடு

அர்ஜென்டைன் இரகங்கள் பயிரிடலாம்.

3 வருட பயிர் சுழற்சி முறையைப் பின்பற்றவேண்டும். முந்தியப் பயிரின் கழிவுகளை அகற்றவேண்டும்.

அடிச்சாம்பல் நோய் : பெனோஸ்போரா பேராசிட்டிகா

அறிகுறிகள்

1. முதலில் இலைப்புள்ளிகள் நேராகவும், வெளிர் பச்சை நிறத்திலும், பின்னர் சாம்பல் நிற - வெள்ளையான ஒழுங்கற்ற இறந்த புள்ளிகள் காணப்படும்.

2. பூக்களின் கிளைகள் தடித்தும் காணப்படும்.

3. இந்நோய் வெள்ளை துருநோயுடன் சேர்ந்தே வரும். பருவக் காலத்தில் தாமதமாக இந்நோய் வரும்.

கட்டுப்பாடு

1. முந்திய பயிரின் கழிவுகளை அகற்றி, பயிர் சுழற்சி முறையைப் பின்பற்றவேண்டும்.